**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8109408

1. District : மாவட்டம் Virudhunagar | PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 03/2024 | Date: நாள் 25.04.2024

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: PC Act 1988 as Amended in 2018 Sections பிரிவுகள்: u/s 7
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 25.04.2024 | Date to : நாள் வரை 15.15 hrs
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.04.2024 Time : நேரம் 19.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.04.2024 Time : நேரம் 19.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — 50 Kms / South West
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.R.வாசுதேவன் | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.ராமசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 03.12.1976 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் விவசாயம் / ஆட்டோ ஓட்டுநர் | (g) Address : முகவரி எண்.34, வடக்குத் தெரு, கோட்டைப்பட்டி, சிங்கபெருமாள்புரம் கிராமம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி.ஜோதிமணி, நகரமைப்பு ஆய்வாளர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம், விருதுநகர் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   -தாமதம் இல்லை-

GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not arise

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

Not arise

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Not arise

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

**பணிந்து அனுப்பப்படுகிறது**

நான் இன்று 25.04.2024 இரவு 19.00 மணியளவில் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, சிங்கம்மாள்புரம் கிராமம், கோட்டைபட்டி, வடக்குதெருவைச் சேர்ந்த திரு.ராமசாமி என்பவரின் மகன் திரு.வாசுதேவன் என்பவர் என் முன்பாக ஆஜராகி விபரம் சொல்லி கொடுத்த கனிணியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை பெற்று அதை படித்துப்பார்த்து, மேலும் அவரிடம் விபரம் கேட்டு தெரிந்து கொண்டேன். உடன் அந்த புகார் தொடர்பாக இரகசிய விசாரணை செய்ததில், எதிரி மீது எதிர்மறையான குறிப்புகள் இருந்ததாலும், வாதி மீது நம்பகத்தன்மையான குறிப்புகள் இருந்ததாலும், வழக்குப்பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருந்ததாலும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, தென் சரக, காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்துவிட்டு, இன்று 25.04.2024 இரவு 22.00 மணிக்கு காலம் 7-இல் கண்ட எதிரி திருமதி.ஜோதிமணி, நகரமைப்பு ஆய்வாளர், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகம், விருதுநகர் மாவட்டம் என்பவர் மீது விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு

/தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது/

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. Vasudevan 25/04/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

26.04.2024 at 09.15 hrs.

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. BOOMINATHAN
Rank: நிலை I.N.S.A. [illegible] POLICE.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p.2

**விருதுநகர் மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.03/2024 பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி**

பிரிவு குற்ற எண்.03/2024 சட்டப்பிரிவு 7 of Prevention of Corruption Act 1988 as amended in 2018-இன்படி வழக்குப்பதிவு செய்தேன். வாதி திரு.R.வாசுதேவன் அவர்களது புகார் விபரம் பின்வருமாறு:- அனுப்புநர் R.வாசுதேவன், த/பெ.ராமசாமி, கதவு எண். 34, வடக்குதெரு, கோட்டைப்பட்டி, சிங்கம்மாள்புரம் கிராமம், ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டம். பெறுநர் உயர்திரு.லஞ்ச ஒழிப்பு அதிகாரி அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகம், விருதுநகர். ஐயா, நான் விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர், கோட்டைப்பட்டி, வடக்கு தெரு, கதவு எண்.34 என்ற முகவரியில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். என் பெயரில் ஒரு ஆட்டோ ஒன்றும் வாங்கி வைத்து நேரம் கிடைக்கும்போது அதன் மூலமும் வருமானம் பார்த்து வருகிறேன். எனது மனைவி திருமதி.இராஜேஸ்வரி பெயரில் 11.02.2022 ஆம் தேதியில் ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பதிவக ஆவண எண்.885/2022-இன்படி ஸ்ரீவில்லிபுத்தூர், நந்தனவனப்பட்டி தெருவில் வசித்து வரும் திரு.முகம்மது சேட் மனைவி திருமதி.சுபைதாள் பீவி என்பவரிடமிருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா சிங்கம்மாள்புரம் கிராமம் நல்லகுற்றாலபுரம் தெருவில் டவுன் சர்வே நம்பர் 2353/12 ஆக உள்ள இடத்தில் 1970 சதுரடி பரப்பளவு உள்ள பிளாட் எண்.21 என்கிற காலி மனையை கிரையத்திற்கு பதிவு செய்து வாங்கினோம். 31.01.2024 அன்று என் மனைவி பெயரில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு மேற்படி மனைக்கு மனை அங்கீகார அனுமதி கேட்டு மனு கொடுத்தேன். பின்னர் இந்த இடத்தில் என் மனைவி பெயரிலேயே வீடு கட்டுவதற்காக இந்த மனையை வரன்முறைபடுத்துவதற்காக டவுன் பிளானிங் இயக்குநரகத்திற்கு 08.02.2024 அன்று இணையதளம் மூலமாக ரூ.500/- பதிவு கட்டணமாக செலுத்தினேன். பின்னர் விருதுநகர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்திலிருந்து 05.03.2024 அன்றைய தேதியில் இந்த மனையை வரன்முறை படுத்தி ஒப்புதல் அளிக்கப்பட்டு, அந்த உத்தரவு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, அதன் நகல் எனது மனைவி பெயரில் எங்களுக்கு கிடைக்கப்பெற்றது. பின்னர் 19.03.2024 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் UNAPPROVED LAYOUT DEVELOPMENT CHARGES ஆக ரூ.27,450/- பணத்தை செலுத்தி இரசீது பெற்றேன். 21.03.2024 அன்று இணையதளம் மூலமாக நகர் ஊரமைப்பு துறைக்கு வரன்முறைப்படுத்துவதற்காக ரூ.16,470/- செலுத்தி இ-ரசீது பெற்றேன். பின்னர் 06.04.2024 அன்று ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் இணையதளம் மூலமாக கழிவுநீர் தொட்டி, மழைநீர் சேமிப்பு, பராமரிப்பு கட்டணம், திட்ட அனுமதி மற்றும் கட்டிட உரிமம் கட்டணம் மற்றும் தொழிலாளர் நல நிதி உட்பட மொத்தம் ரூ.21,300/- பணத்தை செலுத்தி இரசீது பெற்றேன். நாங்கள் மேற்கண்டவாறு அரசுக்கு செலுத்த வேண்டிய

கட்டணங்கள் அனைத்தையும் செலுத்தி, உரிய ஆவணங்களையும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் தாக்கல் செய்துள்ளோம். என் மனைவிக்காக இந்த வேலைகளை நான்தான் ஒவ்வொரு இடத்திற்கும் நேரில் சென்று செய்துவருகிறேன். திரு.விக்னேஷ் என்கிற உரிமம் பெற்ற இஞ்சினீயர் உதவியுடன்தான் இணையதளம் மூலமாக மேற்கண்டவாறு பணத்தை செலுத்தினேன். ஆனால் இதுநாள்வரையில் எந்தவொரு தகவலும் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து எங்களுக்கு கிடைக்கவில்லை. அதனால் நான் இன்று 25.04.2024 ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று பிற்பகல் சுமார் 03.15 மணியளவில் அங்கிருந்த நகரமைப்பு ஆய்வாளர் திருமதி.ஜோதிமணி அவர்களை நேரில் சந்தித்து, விபரம் சொல்லி, என் மனைவி திருமதி.இராஜேஸ்வரி பெயரில் கொடுத்துள்ள விண்ணப்பம் தொடர்பாக ஆணையாளர் அவர்களின் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி உத்தரவுகள் பற்றி விபரம் கேட்டேன். அதற்கு திருமதி.ஜோதிமணி அவர்கள் என்னிடம், எல்லா பணத்தையும் இஞ்சினீயர் மூலமாவே ஆன்லைன்லயே கட்டிட்டு வீட்டிலேயே இருந்தீங்கன்னா உங்களுக்கு ஆர்டர் நேரா வீட்டுக்கே வந்துருமா, நாங்கள் எல்லாம் எதுக்கு இங்க இருக்குறோம், எங்கள வந்து நீங்க நேரா பார்த்து கவனிக்க வேண்டியத கரெக்டா கவனிச்சாதானே உங்களுக்கு வேல சீக்கிரம் ஆகும் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், இந்த விபரம் எல்லாம் எனக்கு தெரியாது மேடம், என்ன மேடம் கவனிக்கனும் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், இஞ்சினீயர் எதுவும் உங்ககிட்ட சொல்லலயா, 10000 ரூபாய்க்கு மேல செலவாகும், எனக்கு தனியா இந்த 10000 ரூபாய கொடுத்துருங்க, உங்க வேலைய எல்லாம் முடிச்சி ரெடியா வச்சிருக்கேன், நீங்க சரின்னு சொன்னா கமிசினர் கிட்ட புட்டப்பண்ணி இன்னக்கே ஆர்டர வாங்கி வச்சிடுறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம், இந்த 10000 ரூபாய் பணத்துக்கு இரசீது தருவாங்களா மேடம் என்று கேட்டதும், அவர் கோபத்துடன் என்னை பார்த்து, என்ன விளையாடுறிங்களா, இதுக்கெல்லாம் இரசீது கொடுப்பாங்களா, உங்களுக்கு சீக்கிரம் ஆர்டர் வேனும்னா, நான் கேட்ட 10000 ரூபாய் பணத்த கொண்டுவந்து என்கிட்ட கொடுங்க என்று கரராக சொன்னார். அவருக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும் அவரிடம் அப்போது சரியென்று சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், இப்ப நீங்க சரின்னு சொல்லீட்டு நாளைக்கு பல்டி அடிச்சிராதீங்க, நீங்க நாளைக்கி 10000 பணத்த கொண்டு வந்து கொடுத்துருவீங்கன்னு நம்பிக்கைல நான் முடிஞ்சா இன்னக்கே உங்க ஆர்டர ஆன்லயன்ல ஏத்திவிடுறேன் என்று சொன்னார். நான் அவரிடம், சரிங்க மேடம் என்னை நம்புங்க மேடம் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். என்னிடம் லஞ்சமாக ரூ.10,000/- பணம் கேட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி அலுவலகத்தில் நகரமைப்பு ஆய்வாளராக பணியாற்றும் திருமதி.ஜோதிமணி என்பவர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (sd) R.Vasudevan

25/04/2024 Sir, Received the complaint by me on 25.04.2024 at 19.00 hrs. The genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found bad. Found prima-facie for the allegation of the complainant. Since the registration of regular case is warranted. The matter is intimated to the SP/SR, V&AC, Chennai and registered a case in Virudhunagar V&AC Cr.No.03/2024 u/s 7 of the P.C. Act 1988 amended in 2018 on 25.04.2024 at 22.00 hrs. and took up for investigation. (Sd) (R.Boominathan) 25/04/2024 Insp/V&AC/VNR.

The original FIR along with original complaint is submitted to the court of the CJM cum Special Judge for P.C. Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers.